பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

16 06 2025 **MONDAY** 12 40 **PM** ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஜிஎஸ்டி, டிஜிட்டல் பணப்பரிமாற்றம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள், கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் முன்னேற்றத்தை தீவிரப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்..
- தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் தேதி முதல் நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- கொல்கத்தாவின் **Khidirpur** சந்தைப் பகுதியில் நேரிட்ட தீ விபத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் சேதமடைந்துள்ளன.
- இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று எகிப்து வலியுறுத்தியுள்ளது.
- 16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்றில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா - இலங்கையை வென்றது.

**<<<<<<<<>>>>>>>>**

ஜிஎஸ்டி, டிஜிட்டல் பணப்பரிமாற்றம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள், கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் முன்னேற்றத்தை தீவிரப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சைப்ரஸ் நாட்டின் **Lemesos** நகரில் வர்த்தக வட்டமேஜை மாநாட்டில் பங்கேற்ற பிரதமர், சைப்ரஸ் நாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் கப்பல் போக்குவரத்து, செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர் துறையில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சைபரஸ் நாட்டுடனான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில், இந்தியா உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்று சைப்ரஸ் அதிபர் திரு. **Nikos Cristodoulides** உடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பிரதமர் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் ஒத்துழைப்பு, இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பிய யூனியன் பொருளாதார வழித்தடம் ஆகியவை குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்த உள்ளனர்.

சைப்ரஸ் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கனடா புறப்பட்டுச் செல்கிறார். அங்கு நடைபெற உள்ள ஜி-7 உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் தேதி முதல் நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிவிக்கையை மத்திய உள்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட் மாநிலங்களில் மட்டும் 2026ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி முதல் இந்த கணக்கெடுப்பு தொடங்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>>

அகமதாபாத் விமான விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளும் உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய உள்துறை செயலாளர் தலைமையிலான இக்குழுவானது மூன்று மாத காலத்தில் இதுதொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுக்கும் வகையில் நிலையான இயக்க செயல்முறைகளை வடிவமைப்பதில் இக்குழு கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விமான விபத்து விசாரணை அமைப்பானது, இந்த விபத்துக்கு காரணமான தொழில்நுட்ப கோளாறுகள் குறித்து விசாரணை மேற்கொள்கிறது.

இதற்கிடையே, விபத்து நேரிட்ட இடத்திலிருந்து இரண்டாவது கறுப்புப் பெட்டி என்றழைக்கப்படும் **Cockpit Voice Recorder** மீட்கப்பட்டுள்ளது.

விமான விபத்து குறித்த விசாரணையை தீவிரப்படுத்த இது உதவும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<<<>>>>>>>>**

இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று எகிப்து அதிபர் திரு. **Abdel Fattah Al - Sisi** வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சைப்ரஸ் அதிபர் திரு. **Nikos Cristodoulides** உடன் மத்திய கிழக்கு பகுதியில் நிலவும் சூழல் குறித்து தொலைபேசியில் பேச்சு நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

இச்சூழல், இந்த பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாட்டு மக்களையும் பாதிப்புக்கு உள்ளாக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

இப்பகுதியில் அமைதியை நிலைநிறுத்தவும், பாதுகாப்பு நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும், சர்வதேச சமூகம் தீவிரமாக செயலாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையே, மத்திய கிழக்கு பகுதி சூழல் குறித்து, அமெரிக்காவுடன் எகிப்து பேச்சு நடத்தியுள்ளது.

அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. **Badr Abdelatty** அமெரிக்க வெளியுறவு அமைச்சக அதிகாரிகளிடம் இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான மோதலை தடுப்பது குறித்து தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தினார்.

மத்திய கிழக்குப் பகுதியின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை மீட்டெடுப்பது குறித்தும், அரசியல் மற்றும் ராஜதந்திர ரீதியிலான தீர்வுகள் மூலம் இப்பிரச்சினைக்கு முடிவு எட்டப்பட வேண்டும் எனவும் அமெரிக்க அதிகாரிகளிடம் திரு. **Badr Abdelatty** வலியுறுத்தியதாக எகிப்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான போர் நிறுத்தம் மற்றும் அணுசக்தி தொடர்பான அமெரிக்க - ஈரான் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர்வது குறித்தும் இந்த பேச்சுவார்த்தையின் போது விவாதிக்கப்பட்டதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

**<<<<<<<<>>>>>>>>**

கொல்கத்தாவின் **Khidirpur** சந்தைப் பகுதியில் நேரிட்ட தீ விபத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் சேதமடைந்துள்ளன.

இன்று அதிகாலை 2 மணியளவில் விபத்து நேரிட்ட பகுதியில் 20-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டதாகவும், அரிசி கிடங்குகள் உள்ளிட்ட பல்வேறு கடைகள் எரிந்து சேதமடைந்துள்ளதாகவும் மேற்குவங்க அரசு தெரிவித்துள்ளது.

விபத்து நேரிட்ட பகுதியை நேரில் பார்வையிட்ட அம்மாநில அமைச்சர் திரு. **Sujit Basu,** அப்பகுதி மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதியளித்தார்.

**<<<<<<<<>>>>>>>>**

பீகாரின் **Saran** மாவட்டத்தில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர், 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

அங்குள்ள **Bajitpur** என்ற இடத்திற்கு அருகே வந்த நான்கு சக்கர வாகனம், ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருப்பதாகவும், விபத்து தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

**<<<<<<<<>>>>>>>>**

அஹமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ருபானியின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறுகிறது.

ராஜ்கோட்டில் அரசு மரியாதையுடன் அன்னாரது இறுதிச் சடங்குகள் நடைபெறும் என்று குஜராத் மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதையொட்டி குஜராத்தில் இன்று அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

மாநில அரசின் நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் தேசியக்கொடிகள் இன்று அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது

**<<<<<<<<>>>>>>>>**

பிரிட்டனின் வெளிநாட்டு உளவு முகமையான **M.16**–ன் தலைவராக **Blaise Metreweli** பொறுப்பேற்கிறார்.

இப்பதவியை ஏற்கும் முதலாவது பெண் என்ற சிறப்பை இவர் பெறுகிறார்.

அந்நாட்டின் பிரதமர் திரு. **Keir Starmer,** உளவுத்துறையினரின் பணி மிக தீவிரமாக தேவைப்படுகிற சூழலில் **Blaise** இப்பொறுப்பை ஏற்கவுள்ளதாகவும், இது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் கூறியுள்ளார்.

**<<<<<<<<>>>>>>>>**

தமிழகத்தின் கிழக்கு ஆழ்கடல் பகுதியில் 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்ததை அடுத்து, கன்னியாகுமரி, சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து 350க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடிக்கச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட - குமார் 35 செகண்ட்ஸ்)

**<<<<<<<<>>>>>>>>**

நாட்டின் மேற்கு, வடமேற்கு பகுதிகளில் சில இடங்களில் இன்று அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் சில இடங்களின் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் மூத்த விஞ்ஞானி திரு. ஜனமணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கோவா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே மகாராஷ்டிராவில் கனமழை தொடர்பான சம்பவங்களால் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

<<<<<<<<>>>>>>>>

தமிழகத்தில், மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, கோவை மாவட்டம், பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து உபரி நீர், பவானி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருவதால், ஆற்றின் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ஹரிகரன் 35 செகண்ட்ஸ்)

<<<<<<<<>>>>>>>>

16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்றில் ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா - இலங்கையை வென்றது.

மாலத்தீவில் நடைபெற்ற இப்போட்டியில் 94-62 புள்ளிக்கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

மகளிர் பிரிவு தகுதிச்சுற்று இறுதியாட்டத்தில் இந்திய அணி - இலங்கை அணியை 103-52 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்தது.

<<<<<<<<>>>>>>>>

ஏ.டி.பி. சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா — பெல்ஜியத்தின் **Sender Gille** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

லண்டனில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டி, இன்றிரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 7-6 என்ற செட்கணக்கில் இந்தியாவின் யூகி பாம்ரி – அமெரிக்காவின் **Robert Golloway** இணையை வென்றது.

**<<<<<<<<>>>>>>>>**

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் திண்டுக்கல் - சேப்பாக்கம் அணிகள் மோதுகின்றன.

சேலத்தில் நடைபெறும் இப்போட்டி, இரவு மணி 7.15-க்கு தொடங்குகிறது.

**<<<<<<<<>>>>>>>>**